**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
*******

2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் நாள் செவ்வாய்க்கிழமை
******

**இடைமனு எண்.1/202-ல் அசல் வழக்கு எண். 214/2017**

முருகேசன் .....மனுதாரர்/வாதி...

...எதிர்...

முருகன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 05.09.2023 அன்று இறுதியாகவிசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு R.ஆத்மநாதன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை-6, விதி-17-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை வாதி அனுபவிப்பதற்கு பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யகூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை

உத்தரவு இடைமனுஎண்.1132/2017-ல் 26.06.2018-ம் தேதியன்று இந்நீதிமன்றமம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தின் கிழக்கு பகுதியில் ஒரு பகுதியை பிரதிவாதி 01.12.2021 அன்று ஆக்கிரமித்து ரெமேட் காம்பவுண்ட் சுவர் அமைத்துவிட்டார். அது சட்டப்படி சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்த ஒரு பகுதியை பொறுத்து வாதி வசம் பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தம் செய்யவேண்டியுள்ளது. வழக்குரையை திருத்தம் செய்யாவிட்டால் மனுதாரர்/வாதிக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>இவ்வழக்கின் எதிர்வழக்குரையை இம்மனுவிற்கான எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதின் சுருக்கம்.</u>**

எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை தவிர வாதிகள் தாவா வழக்குரையிலும், இடைமனு 1132/2017-லும் கண்ட சங்கதிகளை பிரதிவாதி வன்மையாக மறுக்கப்படுகிறது. தாவா சொத்தில் புல எண், பரப்பளவு மற்றும் நான்கெல்லை சரியல்ல. தாவா சொத்தில் பல பனிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக வாதியின் முன்னோர் காலம் முதல் தாவா சொத்து வாதியால் அனுபவித்து வரப்படுகிறது என்பதை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர். தாவா சொத்தை பொறுத்து வாதியின் முன்னோருக்கு எவ்வாறு உரிமை இருந்தது என்பதை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர். வாதியின் முன்னோருக்கு தாவா சொத்தை பொறுத்து எவ்வித நல்லதோர் உரிமை மூலம் இல்லை என்பது தாவா பிராது மூலமாக வெளிப்படுகிறது. இதனால் தான் வாதி வேண்டுமென்றே தாவா சொத்தை பொறுத்து அவரக்கு அரசால் வழங்கப்பட்ட 1996 பாட்டாவை கூறவில்லை. இதிலிருந்தே தாவா சொத்திற்கும் வாதிக்கும் 1996-க்கு முன்பு அவருக்கோ, அவரது முன்னோருக்கோ உரிமை மூலம் இல்லை என்பது நன்கு வெளிப்படுகிறது. தாவா சொத்து விபரத்திலோ மற்றும் இடை மனுவின் சொத்து

விபரத்திலோ தாவாசொத்தின் கீழ்மேல் அளவோ, தென்வடல் அளவோ குறிப்பிட்டு கூறாததால் தாவா சொத்தை பொறுத்து உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதி கோர இயலாது. மேலும் தாவா சொத்தில் வாதிக்கு 163 சதுரட மீட்டர் அளவுக்கு உரிமை மூலம் உள்ளது என்பதை பிரதிவாதி வன்மையாக மறுக்கின்றார். தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள புல எண்.262/1H, 262/2J, 262/34 ஆகியவை பிரதிவாதியின் தந்தையான பொன்னுசாமி மகன் குஞ்சு என்பவருக்கு சொந்தமான சொத்து. மேலும் பிரதிவாதி குடியிருந்து வரும் சொதில் பிரதிவாதிக்கு மட்டுமே உரிமை இல்லை என்பதாலும் இவ்வழக்கில் அவசிய தரப்பினரான பிரதிவாதியின் தந்தையான குஞ்சு என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு Non -jointer of necessary என்ற அடிப்படையில் தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. தாவா சொத்தையும், பிரதிவாதிக்கு உரிமை உள்ள அவருடைய சொத்தை பொறுத்தும் நில அளவையர் கொண்டு கடந்த 2017 ஆகஸ்ட்ட மாதம் அளவீடு செய்ததில் தாவா சொத்தில் வாதிக்கு 163 சதுர மீட்டர் பூமியில் இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்ட வாதி வேண்டுமென்றே தாவா வழக்கை பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக்கட்டளை கோர இயலாது. மேலும் பிரதிவாதிக்கு உரிமையுள்ள சொத்தில் பிரதிவாதி வீடு கட்ட முயற்சி மேற்கொள்வதை தடுக்க வேண்டும் என்ற பொறாமை குணத்திலேயே வாதியால் இவ்வழக்கு பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக, தாவா சொத்தைப் பொறுத்து உரிமை மூலம் இன்றி வாதியால் தொடப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைக்கு**

3. மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலா சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை,

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

மனுதாரர் தரப்பில், மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தை வாதி அனுபவிப்பதற்கு பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யகூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு இடைமனுஎண்.1132/2017-ல் 26.06.2018-ம் தேதியன்று இந்நீதிமன்றமம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும், இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தின் கிழக்கு பகுதியில் ஒரு பகுதியை பிரதிவாதி 01.12.2021 அன்று ஆக்கிரமித்து ரெமேட் காம்பவுண்ட் சுவர் அமைத்துவிட்டார் என்றும், அது சட்டப்படி சரியல்ல என்றும், தாவா சொத்தில் பிரதிவாதி அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்த ஒரு பகுதியை பொறுத்து வாதி வசம் பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தம் செய்யவேண்டியுள்ளது என்றும், வழக்குரையை திருத்தம் செய்யாவிட்டால் மனுதாரர்/வாதிக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை தவிர வாதிகள் தாவா வழக்குரையிலும், இடைமனு 1132/2017-லும் கண்ட சங்கதிகளை பிரதிவாதி வன்மையாக மறுக்கப்படுகிறது என்றும், தாவா சொத்தில் புல எண், பரப்பளவு மற்றும் நான்கெல்லை சரியல்ல என்றும், தாவா சொத்தில் பனிரெண்டு பல ஆண்டுகளுக்கு மேலாக வாதியின் முன்னோர் காலம் முதல் தாவா சொத்து வாதியால் அனுபவித்து வரப்படுகிறது என்பதை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், தாவா சொத்தை பொறுத்து வாதியின் முன்னோருக்கு எவ்வாறு உரிமை இருந்தது என்பதை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும்,

வாதியின் முன்னோருக்கு தாவா சொத்தை பொறுத்து எவ்வித நல்லதோர் உரிமை மூலம் இல்லை என்பது தாவா பிராது மூலமாக வெளிப்படுகிறது என்றும், இதனால் தான் வாதி வேண்டுமென்றே தாவா சொத்தை பொறுத்து அவரக்கு அரசால் வழங்கப்பட்ட 1996 பாட்டாவை கூறவில்லை என்றும், இதிலிருந்தே தாவா சொத்திற்கும் வாதிக்கும் 1996-க்கு முன்பு அவருக்கோ, அவரது முன்னோருக்கோ உரிமை மூலம் இல்லை என்பது நன்கு வெளிப்படுகிறது என்றும், தாவா சொத்து விபரத்திலோ மற்றும் இடை மனுவின் சொத்து விபரத்திலோ தாவாசொத்தின் கீழ்மேல் அளவோ, தென்வடல் அளவோ குறிப்பிட்டு கூறாததால் தாவா சொத்தை பொறுத்து உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதி கோர இயலாது என்றும், மேலும் தாவா சொத்தில் வாதிக்கு 163 சதுரட மீட்டர் அளவுக்கு உரிமை மூலம் உள்ளது என்பதை பிரதிவாதி வன்மையாக மறுக்கின்றார் என்றும், தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள புல எண்.262/1H, 262/2J, 262/34 ஆகியவை பிரதிவாதியின் தந்தையான பொன்னுசாமி மகன் குஞ்சு என்பவருக்கு சொந்தமான சொத்து என்றும், மேலும் பிரதிவாதி குடியிருந்து வரும் சொதில் பிரதிவாதிக்கு மட்டுமே உரிமை இல்லை என்பதாலும் இவ்வழக்கில் அவசிய தரப்பினரான பிரதிவாதியின் தந்தையான குஞ்சு என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு Non -jointer of necessary என்ற அடிப்படையில் தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றும், தாவா சொத்தையும், பிரதிவாதிக்கு உரிமை உள்ள அவருடைய சொத்தை பொறுத்தும் நில அளவையர் கொண்டு கடந்த 2017 ஆகஸ்ட் மாதம் அளவீடு செய்ததில் தாவா சொத்தில் வாதிக்கு 163 சதுர மீட்டர் பூமியில் இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்ட வாதி வேண்டுமென்றே தாவா வழக்கை பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக்கட்டளை கோர இயலாது என்றும், மேலும் பிரதிவாதிக்கு உரிமையுள்ள சொத்தில் பிரதிவாதி வீடு கட்ட முயற்சி மேற்கொள்வதை தடுக்க வேண்டும் என்ற பொறாமை குணத்திலேயே வாதியால் இவ்வழக்கு பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக, தாவா சொத்தைப் பொறுத்து உரிமை மூலம் இன்றி வாதியால்

தொடப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்தததில் அசல் வழக்கை மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை வாதி அனுபவிப்பதற்கு பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யகூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு இடைமனுஎண்.1132/2017-ல் 26.06.2018-ம் தேதியன்று இந்நீதிமன்றமம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தின் கிழக்கு பகுதியில் ஒரு பகுதியை பிரதிவாதி 01.12.2021 அன்று ஆக்கிரமித்து ரெடிமேட் காம்பவுண்ட் சுவர் அமைத்துவிட்டார் என்பது மனுதாரின் வழக்காகும். எதிர்மனுதாரர் தரப்பில் தாவா தாக்கல் செய்த காலத்திலேயே மனுதாரர்/வாதி தாவா சொத்து முழுவதும் சுவாதீனத்தில் இல்லை என்ற எதிர்மனுதாரரின் வாதமானது வழக்கின் விசாரணையின் மூலம் தான் முடிவுகான இயலும். மேலும் அசல் வழக்கின் சாட்சிய விசாரணையும் தொடங்கப்படாத நிலையில் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் பின்னிட்டு ஏற்படும் (Multiplicity proceedings) ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு தரப்பனர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும் மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

மனுதாரர் தரப்பு சாட்சிகள் – இல்லை –

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 01.11.1996 | மனுதார் முருகேசன் பெயருக்கு நத்தம் நிலவரி திட்டதின் கீழ் வழங்கப்பட்ட மனைப் பட்டாவின்அசல் |
| ம.சா.ஆ.2 | -- | மனுதாரர் முருகேசன் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை – 3) |
| ம.சா.ஆ.3 | -- | மனுதாரர் முருகேசன் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை – 3) |

எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் – இல்லை –

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை –

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.1/2022–ல்
அசல் வழக்கு எண்.214/2017
நாள்.12.09.2023.